70 o. M. 2445

உ

சிவமயம்.

# வீரசைவம்.

திங்கள் வெளியீடு.


மலர் உ | பிரமோதூத—வைகாசி 1930—மே | இதழ் ரு



க. கடவுள் வாழ்த்து.

உ. தமிழ் நாடும், வீரசைவமும்.

௩. ஸ்ரீ இரேணுகாசாரியரும், ஸ்ரீ சங்கராசாரியரும்.

௪. ஸ்ரீபசவேச விஜயம்.

ரு. திருமுருகாற்றுப்படை.

௬. மருந்து.

எ. விருபாக்ஷ உடையார்.

அ. வீரசைவ சித்தாந்த பஞ்சாங்கம்.



பத்திராசிரியர்: வ். குமரவீரையர்,
வீரசைவ நிலையம்,
மூசிரி, (திருச்சி ஜில்லா.)



நித்தியானந்த அச்சுக்கூடம், பெரியகடைவீதி. துறையூர்.—1930.

உ

சிவமயம்.

# வீரசைவம்.

பிரமபுரம் ஸ்ரீ சிவஞானபாலைய சுவாமிகள் அருளால்

மகாசங்கத்தினின்றும் வரும்

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

OFFICE OF THE REGISTRAR
4 JUL 1930

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.


| மலர் | பிரமோதூத—வைகாசி. | இதழ் |
|---|---|---|
| உ. | 1930—மே. | ரு. |


(கடவுள் வணக்கம்.)

1. *பஞ்சாநந தநுத்பூதாங் பஞ்சாக்ஷர மநூபமாங்*
*பஞ்சசூத்ர க்ருதோவந்தே பஞ்சாசார்யாங் ஜகத்குரூந்.*

2. முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே யீசன் மகனே — யொருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கா லெப்பொழுதும்
நம்பியே கைதொழுவே னான்.

3. வெள்ள வேணிப் பெருந்தகைக்கி யாஞ்செய் யடிமை மெய்யாகக்
கள்ள வேடம் புனைந்திருந்த கள்வ ரெல்லாங் களங்கமறும்
உள்ள மோடு மெய்யடியா ராக வுள்ளத் துள்ளுமருள்
வள்ள லாகும் வசவேசன் மலர்த்தா டலையால் வணங்குவாம்.

4. பங்க வளற்று வழிமாற்றி யொருநல் வழியைப் பகர்வார்போல்
தங்கண் மதியிற் பலபிதற்றுஞ் சமய ருரைக டமைநீக்கி
அங்க நிலையிற் றிலிங்கநிலை யிற்றென் றருளும் வீரசைவ
சிங்க நிலைத்த வருட்சென்ன வசவன் றிருத்தாள் சிரத்தணிவாம்.

5. மறைமுதற் கிளந்த வாயான் மதிமுகிழ் முடித்த வேணி
இறைவர்தம் பெயரை நாட்டி யிலக்கணஞ் செய்யப் பெற்றே
அறைகடல் வரைப்பிற் பாடை யனைத்தும்வென் றாரி யத்தோடு
உறழ்தரு தமிழ்த்தெய் வத்தை யுண்ணினைந் தேத்தல் செய்வாம்.

# தமிழ்நாடும் வீரசைவமும்.

சமயப் பற்றுற்ற சதுரர்களே!

இரண்டாவது மலர் முதலாவது இதழின்கண் "தமிழ்நாடும் வீரசைவமும்" எனப் பெயரிட்டெழுதிய கட்டுரையின் கருத்துக்களை நேயர்களிற் பெரும்பாலோர் அறியாமலிருந்திரார். அக்கட்டுரையில் பண்டைக்காலத்தில் தண்டமிழ்நாடு எய்தியிருந்த பெருமையும், அந்நாட்டில் தலைசிறந்து விளக்கமுற்றிருந்த வீரசைவ சமயத்தின் உயர்வும், இச்சமயத்திற் றோன்றிய பெரியார்செய்த செயற்கருஞ் செயலும், அவர்கட்கு நிலைக்களனாக விளங்கிய மடாலயங்களின் வீறும், அவையனைத்திற்கும் மாறாக இக்காலத் தெய்தியிருக்கும் நிலைதவறும் குறிப்பிடப்பட்டன; எனினும், மீண்டும் அவற்றின் நிலைமையினையும், அவற்றைச் சீர்திருத்தற்கான முறையினையும் உங்கள் ஞாபகத்திற்குக் கொண்டுவராமல் விடுக்க ஒருப்படாமையின் இவ்விதழின்கண்ணும் எழுதலாயினேம்.

பெரியீர்! இந்நாட்டின்கண் நமது வீரசைவ சமயம் இக்காலத்தில் மாறுபட்டிருப்பதுபோல எந்நாட்டினும் எக்காலத்தும் எதுவும் தலைதடுமாற்றம் அடைந்திருந்ததெனக் கூறுதற்கிடமில்லை. அஃதென்ன அவ்வளவு நிலைமாறி யிருக்கின்றதா வீரசைவம்? இப்பத்திரிகையிற் கூறுவதோ விந்தையா யிருக்கின்றது! என்பீரேல் கூறுதும். வீரசைவ மதத்தின் மூலபுருஷராகிய ஆசாரியர்கள் யார்? அவர்கள் எக்காலத்து எங்கிருந்தனர்? அவர்செய்த அரிய செயல்கள் யாவை? அவர்கள் தாபித்த பீடங்கள் எங்கு எந்த நிலையிலிருக்கின்றன? என்று எழும் வினாக்களுக்குத் தக்கவிடை கூறுவோர் பலராகக் காணமுடியா. இன்னும், ஐயன்மீர்! உங்கள் மதத்தின் கொள்கை யாது? நீங்கள் எந்த ஆசாரிய பரம்பரையைச் சார்ந்தவர்கள்? உங்கள் ஆசாரிய மூர்த்தியைக் கண்டு வழிபட்டதுண்டா? அவர்களால் நீங்கள் அறிந்துகொண்ட உண்மை யாது? என்று பிறர் வினவுவரேல் விடைகூற முன்வருவோர் மிகச்சிலர். சுவாமிகாள்! உங்கட்குரிய கோத்திரம் யாது? சூத்திரம் என்னை? பிரவரம் எதுவோ? என்னின் பதில் உரைப்போர் அவரினும் மிகச் சிலர்.

தகைகமையீர்! அவை போகட்டும், வீரசைவ சமயத்தில் பஞ்சசூதகமில்லை என்கின்றனரே அது எம்மட்டிலும் உண்மை? அஃது உங்கள் அனுட்டானத்தில் எவ்வாறு கொள்ளப்படுகின்றது? என்று எதிரும் கடாவிற்கு நேர்நில்லாதவர்போல் அகல்பவர் பலர்; அங்ஙனம் அகன்றுவிடாமல் தாறுமாறாக விடைகூறி அகப்பட்டு விழிப்பவர் அவரினும் பலர். இன்னோர் தாம் அறியாது இருப்பதுடன் அமையாது அறிந்தார்போல் வாய்வந்தவற்றைப் பிதற்றி மதத்தின் பெருமையினையும் அருமையினையும் அந்தோ குறைக்கின்றனர்! சோழநாட்டுச் சைவரைத் தாமிரபர்ணிநதிக் கரையில் திருநெல்வேலிச் சைவர் பரீக்ஷிப்பதுபோல, ஐயா! வருக! நீங்கள் எவ்வாறு எந்த பத்ததியை அனுட்டானத்தில் வைத்துச் சிவலிங்கபூசை புரிகின்றீர்கள்? பீடத்தில் அமர்த்திப் பூசியாது கரதலத்தில் எழச்செய்து அப்பெருமானைப் பூசிப்பதன் கருத்து அல்லது பயன்தானென்னை? என்றோர் உண்மையன்பர் வினவுவரேல் ஏற்ற விடைகூறி உண்மையை விளக்கி அவரைத் தம் வழிப்படுத்துவோர் அபாவரே என்னலாம். இவையே பக்தர் அல்லது மாகேசர் இயல்பு.

நிற்க, சமயத் தாபனசாரியராகக் கருதியிருக்கும் மடாதிபதிகளிற் சிலரையடுத்து வினவினாலோ அவர் பீடாரோகண முடையராய்ச் சின்முத்திரை காட்டித் தக்ஷிணாமூர்த்தியாய் அமர்ந்துவிடுவர். அன்றேல் சிலர் காமதகனனாகத் தம்மையெண்ணிக் கண்விழித்துச் சீறுவர். கற்றுணர்ந்த பெரியராயுள்ள இரண்டொருவரையடுத்துக் கேட்கும் பாக்கியங் கிட்டுமேல் அப்பெரியார் சைவஸ்மார்த்த உலகத்தில் வீரசைவத்தைப்பற்றி வாய்திறப்பின் சைவ சித்தாந்தப் பெரியார் தம்மைப் புறக்கணிப்பரோ? வைஷ்ணவ நண்பர்கள் வைசம்மியங் கொள்ளுவரோ என்றையுற்று அஞ்சிக் கற்றவன்மையால் ஏதேதோ பேசிக் கழித்துவிடுவர், மற்றும் சில படிப்புடையார் நாமா வீரசைவத்தை நிலைநாட்ட வல்லோம், காலத்திற்கேற்பக் கம்பர்கவி, பாரதம், சங்கவிலக்கியம், சிவஞானபோதம், சித்தியார் என்னும் அரிய நூல்களை ஆராய்ந்து சில சொற்பொழிவாற்றப்பழகி மேடைமேலேறிச் சொற்பொழிவாற்றித் தலைவரது மதிப்பைப் பெற்று ஆங்கில உயர்தரப் பாடசாலைகளில் தமிழாசிரியராயமர முயற்சித்து நிற்பர். அம்மட்டிலுமா இந்நாட்டின் மடாதிபதிகள் தமது மடம் இன்ன பீடத்தைச் சார்ந்ததென்று வாய்விட்டால் மடத்தின் பாத்தியதையும் வருவாயிற்

பங்கும் அந்த பீடாதிகாரியைச் சார்ந்துவிடுமோ என்றையுற்று இது தனித்தமடம், நேரான பரம்பரை என்பர்.

சில மடாதிபதிகள் தமது மடத்தின் முதற்குரவராயிருந்தோர் வீரசைவ பரம்பரை பட்டாதிகார மூர்த்தியை அடைந்து வீரசைவா கமப்படி வீரசாமானிய விசேட நிராபார தீக்ஷைகளைப்பெற்றுச் சிவ லிங்கதாரண முடையராய்த் தமது பெருந்தகைமைக் கேற்றவாறு அரசர் முதலியோரால் கட்டிக்கொடுக்கப்பெற்ற மடாலயத்தின்கண் அமர்ந்து அடியார் பூசை செய்துவந்த சுயம் நிராபாரராகவிருந்தும், அவர் முடிவிற் கைக்கொண்ட குருபரம்பரையை உரைக்காது பூரு வாச்சிரம பரம்பரையைக் கூறிக்கொள்கின்றனர். சிலர் புண்ணிய விசேடத்தால் இடையில் தாரண தீக்ஷைபெற்ற சீலராயிருந்தும் எக் காரணம்பற்றியோ தாரணமில்லாதவர் படைக்கும் உணவு முதலிய வற்றை உண்கின்றனர். சில வீரசைவப் பெரியாரின் சமாதியின் கண் எழுந்தருளியிருக்கும் இலிங்கமூர்த்தியும் பேணுதிருப்பதை விடத் தாரணம்பெருத இவ்வன்பராலாவது பூசிக்கப்படுகின்றேமே என்று கிடைத்ததைக்கொண்டு மகிழ்ந்திருக்கின்றனர்.

நமது சமயத்தில் விரக்த சந்நியாசம்பெற்றுச் சரமூர்த்திகளாகச் சஞ்சரித்துப் பூஜ்யகராக எழுந்தருளிப் புனிதராக்குதலைக் கடமை யாகக் கொள்ளும் பெரியார் சித்திரகல்துருகம் ஸ்ரீஜகத்குரு ஜயதேவ முருக ராஜேந்திர மகாசுவாமிகளை யடுத்து குருகுல வாசஞ்செய்து அறிவு, ஒழுக்கங்களின் முதிர்ச்சியால் ஆச்சிரமம் பெற்றுவருவது வழக்கமாயிருப்ப, அப்பீடத்தைக் கண்டு தரிசித்தலுஞ் செய்யாத பெரியாரிற் சிலர் பார்ப்பனப் புரோகிதரைப்போல் பாத்தியங் கொண் டாடிக் காணிக்கை பெறுவதில் கவலையுறுகின்றனர். இக்கூற்றுக்கள் எல்லாம் நகைச்சுவை விளைப்ப எள்ளி எழுதப்பட்டனவோ என அறிஞராவோர் புறக்கணித்தலாகா; பழியின்றி வீரசைவ வுலகம் சீர்பெற வேண்டுமென்ற கவலையால் உண்மையில் கண்கூடாப்பட் டவை எழுதப்பட்டனவே யன்றி வேறன்று.

நிற்க. உண்மை வீரசைவர்களும், வீரசைவ மடாதிபதிகளும் தமது இல்லத்திலும் மடாலயத்திலும் எவ்வித கிரியைகளைச் செய்யுங் காலத்தும், ஸ்ரீசதாசிவமூர்த்தியின் சத்தியோஜாதாதி பஞ்சமுகத்தி னின்றும் அப்பிராகிருதராகத் தோன்றிய ஸ்ரீ பஞ்சாசாரியர்களைக் கடாதிகளில் எழுந்தருளச் செய்து பூசித்து அவர்களது அருளைப்

பெறும் பாவனையாக நடத்திவரும் வழக்கம் இன்றும் இருந்துவருகின்றது. இக்கொள்கை இல்லாதவர் வீரசைவர் ஆகார். அங்ஙனமிருப்ப, கேவலாத்வைத மதத்தைப் பின்பற்றிய துறவினையுடைய பெரியாரும் பிறரும் அம்மதத்தாபகராகிய ஸ்ரீசங்கராசாரியார் பீடத்தில் அமர்ந்திருக்கும் ஆசாரியசுவாமிகளை வரவேற்று உற்சவாதிகளை நடத்திப் பாதபூசை செய்து தீர்த்தப் பிரசாதம் பெற்று மகிழ்வதேயன்றிப் பிறரையும் உடன்படுத்தி ஜகத்குருவென எடுத்துக்காட்டுதல் போல இந்நாட்டில் வீரசைவ மடாதிபதிகளாவது வீரசைவர்களாவது இதுவரை யாரேனும் தங்கள் மதத்தாபனசாரியராகிய ஸ்ரீபஞ்சாசாரிய பீடாதிபதிகளில் ஒருவரை வரவேற்றுப் பூசை முதலியன செய்து பேறு பெற்றவர்கள் உண்டா? இவர்க்கு எங்ஙனங் குருகிருபை கிடைக்கும்? இவர்கள் எங்ஙனம் மதப்பிரசாரஞ் செய்யப் போகின்றனர்? தாந்தாமே பெரியவரென்னுஞ் செருக்கு இந்நாட்டில் அதினும் வீரசைவசமூகத்தில் வேரூன்றிநிற்கின்றதே! அந்தோ இக்குறை அகலுவ தென்நாளோ!

இந்த உயரிய மதம் பல பாஷைகள் வழங்கும் பாரதநாடெங்கும் பரவியிருக்கின்ற தென்னலாம். தமிழர் கன்னடம் பேசவறியார். தெலுங்கரோ இருமொழியும் பேசவறியார். இன்னும் வடக்கே சென்றால் கன்னடமும் பேசாது இந்தி, இந்துஸ்தான் முதலியன பேசுகின்றனர். வேதமும் ஆகமமும் பொதுவாக சமஸ்கிருத பாஷையில் எழுதப் பெற்றுள்ளன. வீரசைவ சம்பந்தமான பெரும்பகுதியான நூல்களும், பாஷியங்களும் வடமொழியிலுங் கன்னடத்திலும் எழுதப் பெற்றுள்ளன. தெலுங்கினும் இரண்டொன்றுண்டு. தமிழில் மொழிபெயர்த்த நூல்களில் மறைந்தனபோக எஞ்சி நிற்பன சிலவே. சமய நூல்களைப் பயில விரும்புவோர் வடமொழியுடன் கன்னடமும் பயில வேண்டுவது அவசியம். பஞ்சாசாரிய பீடங்களில் இரண்டு கன்னட தேயத்திலும், இரண்டு இந்துஸ்தானத்திலும், ஒன்று தெலுங்கு நாட்டிலும் இருக்கின்றன. ஓர் பொது பாஷையின்மையால் ஒற்றுமையின்றி வீரசைவர் இடர்ப்படுகின்றனர். வடமொழியை நூல்வழக்கு மொழியாகவும், கன்னடத்தை இயலுமேல் உலகவழக்கு மொழியாகவும் கொண்டால் இக்குறையை அகற்றலாம். இங்ஙன மிருப்பத் தமிழர் கன்னடத்தைப் புறக்கணிப்பர். கன்னடம் பேசுவோர் தமிழைப் புறக்கணிப்பர். தெலுங்கரோ ஒன்

றுக்குந் தலைகொடாதிருப்பர். இஃதோர் பெருங்குறை யல்லவா? எக்குறைக்கென்று ஏக்கமுறுவோம்! எந்த மதம் தொகைப் பெருக்கா லும் சமூக ஒற்றுமையாலும் மேன்மையடையாது இருக்கின்றதோ அந்த மதத்திற்கு எப்பொழுதும் பெருமையில்லை. எம்மதம் இரு வகையாலும் பெருமை யடையவில்லையோ அந்த மதாவலம்பிகள் தம் மதத்தைப் போற்றாது நாணிக் கைவிடுவர். இன்னும் பலபடியாய் விரித்துரைப்பதில் பயன் யாது? நாடெங்கும் நாஸ்திகமதம் என் னும் பெருந்தீபிடித்துக்கொண்டு எரிகின்ற காலத்தே, அத்தீயை அணைக்க முயலாது வாளா இருப்போமேல் அரிதிற் போற்றத்தக்க நம் மதமா நிலைகொள்ளும்? ஆதலால் இனி நாம் கணமும் வாளா இருத்தல் கூடாது. சென்னை மாகாணத்திலுள்ள வீரசைவரனைவ ரும் மாகாண மகாசபையாக ஓரிடத்தில் கூடவேண்டும். கூடிச் சமய முன்னேற்றத்திற்கான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும். கூடிய விரைவில் வடநாட்டிலுள்ள குருவர்க்கத மடத்தாருள் ஒரு ஜகத்குரு சுவாமிகளை இந்நாட்டில் எழுந்தருளச் செய்வதற்கான முயற்சியைச் செய்தல் வேண்டும். மடாதிபதிகளும் பிறரும் தம்மதிப்பை ஒதுக்கி வைத்துவிட்டுப் பொதுவில் சமயப் பிரசாரஞ்செய்ய முன்வரவேண் டும், சீர்கேடான மடங்களைச் சீர்திருத்தற்கு ஓர் சபையை ஏற் படுத்தவேண்டும். வீரசைவர்களுள் பல பகுப்பும் சீர்கேடுமிருப்ப தால் அவற்றை ஆராய்ந்து தொகுப்பதற்கு பல ஜில்லாக்களிலிருந் தும் பஞ்சாயத்தாரைத் தேர்ந்தெடுத்து அவர்க்குரிய பொறுப்பைத் திட்டஞ் செய்யவேண்டும். தடைப்பட்டு நிற்கும் வீரசைவ இரத்தம் உடலெங்கும் பரவி உணர்ச்சியை உண்டாக்குதற்கான சிகிச்சையை விரைவில் செய்தல் வேண்டும். நம்மவர் படிப்பிலும் பாக்கியத்திலும் முன்னேற்றம் அடைவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும். அந்த மகாநாட்டிற்கு வடநாட்டிலுள்ள அனுபவத்திலும் அறிவிலுஞ் சிறந்த பெரியாரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்க வேண்டும். இவை யெல்லாம் வீண் கனவென்று இகழ்ந்து புறக்கணிக்க வேண்டா. முயற்சி திருவினையாக்கும் என்பது பொய்க்காதல்லவா? உங்கள் ஒற்றுமையே காரணம். முயற்சியே பலனளிப்பது. முந்துங்கள்! முந்துங்கள்!! இவ்விடுமுறையிலேயே செய்ய முந்துங்கள்! இறைவ னருள் முன்னின்று உதவுவதாகுக!!

# ஸ்ரீ இரேணுகாசாரியரும் ஸ்ரீ சங்கராசாரியரும்.

## (ஸ்ரீ சந்திரமௌளீஸ்வர லிங்கம்).

ஆஸ்தான வித்துவான், வே. சிரசி. குருசாந்த சாஸ்திரிகள், மைசூர்.

*(பிரபா பத்திராசிரியர்).*

---

ஸ்ரீ பரமேஸ்வரன் இவ்வுலகத்திலுள்ள எல்லாப்பிராணிகளையும் மேன்மைக்குக் கொண்டுவருவதற்காக ஒவ்வொரு காலத்திலும் தனதம்சமடைந்த மகாத்மாக்களை அவதாரஞ்செய்வித்து, அவர் முகமாக உலகத்தைத் தூய்மையாக்குகின்றான் என்பது பல அறநூல்களால் அறிகின்றோமல்லவா! கடவுளது கட்டளைப்படி அநேக மகாத்மாக்கள் இப்பரதகண்டத்தில் தோன்றி நாஸ்திகத்தையொழித்து ஆஸ்திக மதத்தை நிலைநாட்டி மங்களத்தை யுண்டாக்கிப் புகழுடன் சென்றிருக்கின்றார்கள். அவருள் ஸ்ரீ இரேணுகாசாரியர், ஸ்ரீ சங்கராசாரியார் இராமாநுஜாசாரியார் முதலாயினோர் பிரசித்திபெற்றவர்கள். இரேணுகாசாரியர் முதலிய பஞ்சாசாரியர்கள் பாஷியங்கள் மூலமாக, சக்தி விசிஷ்டாத்வைத சித்தாந்தத்தை நிலைநாட்டி உலகத்தால் போற்றுபவராயினர். இவர்களைப்போலவே சங்கராசாரியரும் இராமாநுஜாசாரியரும் அத்வைதம் விசிஷ்டாத்வைதம் என்னும் மதங்களைத்தாபித்துப் புகழ்பெற்றனர். பொதுவாக நோக்கினால் சங்கராசாரியாருடைய மதம் பரதகண்டத்தில் பெரும்பாலும் பரவியிருக்கின்றது. இந்த ஆசாரியர் கேரளத்தைச்சேர்ந்த 'காரடி' என்னுங்கிராமத்தில் 'சிவகுரு' என்னும் துவிஜபுங்கவரிடத்தில் அவதரித்து பவுத்தாதி மதங்களைக் கண்டித்து அசாதாரண சக்தியினால் உலகமெங்கும்பரவிய புகழுடையராயினர். சங்கருடைய அம்சபூதராயிருத்தலினால் சங்கராசாரியரென்றழைக்கப்பெற்றார். இவர் இராமாநுஜரைப்போலாது சிவபக்தியையே நிலைநாட்டினவர். இவர் தமது ஜீவியகாலத்தில் சிவபெருமானைத்துதித்தாற்போல ஏனைய தேவதைகளைத் துதித்தாரல்லர்.

இவர் தமது சரீரத்தில் சிவசின்னங்களைத் தரித்துக்கொண்டிருந்தாரே யன்றி விஷ்ணு சின்னங்களைத் தரித்துக்கொண்டிருந்தாரல்லர். இவர் சிவநாமத்தை உச்சரித்துக்கொண்டிருந்தாரே யன்றிப் பெரும்பாலும் ஏனைய நாமங்களை உச்சரிக்கவில்லை. இவற்றால் பெரும்பான்மையும் இவர் சிவபக்தியுடையரா யிருந்தாரென்றே தெளிவாகின்றது. இவ ரால் எழுதப்பட்ட சிவாநந்தலகரி, என்னும் சிவத்தோத்திர கிரந்தத் தில் சிவனுடைய சர்வோத்தமத்தை உண்மையன்புடன் கொண்டாடி யிருப்பதை நோக்கினால் அவர் பால் நிறைந்திருந்த சிவபக்தியைக் கணக்கிட முடியாது. அஃதெங்ஙனமெனின், சகஸ்திரம் வர்த்தந்தே, என்னும் சுலோகத்தையும் அதன் கருத்தையும் நோக்குவார்க்கே அவருடைய சிவபக்தி எவ்வளவு உன்னத நிலையிலிருந்ததென்பது புலப்படும்.

"ஆதித்யமம்பிகாம் விஷ்ணும் கணநாதம் மகேஸ்வரம்" என்பத னால், சூரியன், சக்தி, விஷ்ணு, கணபதி, மகேஸ்வரன் இந்த ஐவர் களையும் ஒரே பாவனையாகப் பூசிக்கவேண்டுமென்று ஸ்ரீ சங்கராசாரி யர் கர்மடராகிய ஸ்மார்த்தரிடத்தில் நிபந்தனையைச் செய்தாலுங்கூட, தமது பீடத்தில் தனித்த "சந்திர மௌளீஸ்வரர்" என்னும் நாமத் தையுடைய சிவலிங்க பூசையையே பிரதானமாகக் கொண்டிருக்கிறார் என்பது யாவருமறிந்த விஷயமே. இந்தப் பீடத்தில் இதுவரையும் விஷ்ணுபூசை செய்ததாகக் காணப்படவில்லை. இந்த ஸ்ரீசங்கராசாரி யர் ஸ்ரீ இரேணுகாசாரியரால் சந்திர மௌளீஸ்வர லிங்கத்தைப் பெற்றுக்கொண்டதன்மேல், விசேடமாகச் சைவ தத்துவங்களைப்பற்றி நின்றாரேயன்றி வேறொன்றைப்பற்றி நின்றாரல்லர். இந்தப் பீடத்தி லாவது இந்த மதத்தினரிடத்தாவது சிவசின்னங்களாகிய விபூதிருத்தி ராக்ஷங் காணப்படுகின்றனவேயன்றி ஏனைய தேவதைகளின் சின்னங் கள் இதுவரையுங் காணப்படவில்லை. இதற்கெல்லாம் ஸ்ரீஇரேணுகா சாரியர் ஸ்ரீ சந்திரமௌளீஸ்வர லிங்கத்தைக் கொடுத்தருளி அந்த இலிங்கமூர்த்தியிடத்தில் உறுதியான பக்தி நிலைபெறும்படி உபதேசித் திருப்பதே மூலகாரணமென்று சொல்லவேண்டியதாகின்றது. இந்த விஷயத்தில் சிலர் ஸ்ரீசங்கராசாரியர்க்கும் ஸ்ரீஇரேணுகாசாரியர்க்கும் யாதொரு சம்பந்தமுமில்லை யென்றும், சந்திரமௌளீஸ்வர லிங்கம் இரேணுகாசாரியரால் கொடுக்கப்படவில்லை யென்றும், இது நம்பத் தகுந்ததல்லவென்றும் பொய்மை கூறுகின்றனர். இது அவருடைய

மயக்கமேயன்றி வேறன்று. எப்படியென்றால்; சித்தநாத சிவாசாரியாரால் எழுதப்பட்ட இரேணுகவிஜயத்தில் சந்திரமௌளீஸ்வரலிங்கப்பிரதானம் விளக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றது. அன்றியும் இவ் விஷயம் சிவதத்துவரத்தனகரம், வேதாந்தசார வீரசைவ சிந்தாமணி முதலிய கிரந்தங்களிலும் பிரதிபாதிக்கப்பட்டுள்ளது. அல்லாமலும் இன்றைக்கு நூறுவருடங்களுக்கு முன்னர் ஸ்ரீசிருங்கேரிமடத்திற்கே அதிபதியாயிருந்த சச்சிதானந்த பாரதீஸ்வாமிகள் என்ற மகாத்மர் அக் காலத்தில் தமது சமஸ்தான வித்துவானாகை இருந்த காசிலக்ஷ்மண சாஸ்திரிகளென்ற கவிபுங்கவரால் ஆதிசங்கரர் முதல் சகல சாமிகளுடைய சரித்திரங்களைக் *குருவம்சகாவியம் என்ற பெயரால் சமஸ்கிருத பாஷையில் பத்தியரூபமாக எழுதுவித்திருக்கின்றனர். இந்நூல் சிருங்கேரிமடத்து லைப்ரரியில் இருக்கின்றது, மைசூர் ஸ்ரீமந் மகாராஜருடைய ஆஸ்தான தர்மாதிகாரிகளாகிய வித்தியா விசாரத வே. குணிகல் இராமசாஸ்திரிகளால் பரிசோதிக்கப்பட்டு சென்னை மாகாணத்தைச்சேர்ந்த ஸ்ரீரங்கத்திலிருக்கும் வாணீவிலாச அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. இந்த நூலின் மூன்றாவது சருக்கத்தில்:—

ஸ்ரீ சங்கராசாரியார் பரதக்கண்டமுழுவதும் சஞ்சரித்துக் காஸ்மீரதேசத்திற்குச்சென்று அங்கிருந்த சாரதாதேவியைக் கொண்டுவந்து சிருங்கேரியில் தாபித்தாரென்றும், அதன்பிறகு தாம் காஞ்சிச் செல்ல ஆயத்தமாகி சுரேஸ்வராசாரியன் என்ற தமது பிரதம சிஷ்யருக்குச் சிருங்கேரி மடத்தின் பட்டத்தைக் கட்டிவைத்தாரென்றும், அதன்மேல் சுரேஸ்வராசாரியருக்கே "ஏ சுரேஸ்வராசாரியனே! நீ, ஸ்ரீ ரேணுகாசாரியர் எனக்கு முன்னமே அனுக்கிரகித்துள்ள சந்திர மௌளீஸ்வர லிங்கத்தையும், ரத்தின கர்ப்பகணபதியையும், பூசிப்பாய்" என்று உத்தாவுசெய்து காஞ்சீமாநகரத்திற்கு எழுந்தருளினாரென்றும் இத்தியாதி விஷயங்கள் எழுதப்பட்டுள்ளன. இந்த நூலினுள்ள பத்தியத்தையும் நூலாசிரியராலேயே எழுதப்பட்ட வியாக்

---

* 'குருவமிசகாவியம்' என்ற கிரந்தத்திலுள்ள சமஸ்கிருதபாஷையிலுள்ள பத்தியத்தையும் அதன்வியாக்கியானமாகிய கத்தியத்தையும் அடுத்த இதழில் கிரந்த எழுத்தில் வெளியிடலாமென முயற்சிக்கின்றோம். ப-ர்.

கியானத்தையும் கண்டு தெளியலாம். 'ப்ரஹத்சங்கரவிஜயம்' என்னும் பிராசீன கிரந்தத்தில் இரேவணசித்தருக்கும் சங்கராசாரியருக்கும் நடந்த சம்வாத ரூபமான 'சித்தசங்கரசம்வாதம்' என்ற ஓர் பகுதியிருக்கின்றதென்றும் வதந்தியுண்டு. இதுவல்லாமலும் அநேக கிரந்தங்களில் இந்த விஷயம் வெளிப்படையாகப் பிரதிபாதிக்கப்பட்டுள்ளது. அதை முறையாக வெளிப்படுத்துவோம். (தொடரும்.)

---

# ஸ்ரீபசவேச விஜயம்.

திருவாளர், C. சிக்கவீரப்பா அவர்கள், B. A., L. L. B.

## சீவர்கள்பால் கருணையும் சீர்திருத்த முறையும்.

நமது கருணைக்கடலாகிய ஸ்ரீபசவேசர் அமைச்சராக ஆட்சி புரியுங்காலத்தும் கர்நாடக நாட்டின்கண் பலர் வேலையின்றிச் சோம்பித்திரிந்து காலங்கழித்து வந்தனர். அப்பொழுது நம் வள்ளலார் அவ்வேழை மக்களது பரிதாப நிலையைக்கண்டு அவர்களது வறுமையைப்போக்கி நல்வாழ்வு பெறுதற்கான ஏற்பாட்டைச் செய்யச் சில நாள் ஆராய்ந்துவந்தனர். பின்னர் முடிவாகத் தீர்மானித்து முதற்கண் அத்தேயத்தில் சுலபமாக விளையும் பருத்தியைப் பஞ்சாக்கி அயல்நாட்டுக்கு ஏற்றுமதி செய்வதைத் தடைப்படுத்தி ஆங்காங்குப் பல பஞ்சுச் சாலைகளையும். நூற்சாலைகளையும் ஏற்படுத்தி உள்நாட்டிலேயே அவை தங்கும்படிச் செய்தனர். ஏழைமக்களை அச்சாலைகளில் பருத்தியினின்றும் கொட்டையைப் பிரித்துப் பஞ்சாக்குவதிலும், பஞ்சை நூலாக நூற்று அந்நூலைக்கொண்டே ஆடை நெய்வதிலும் பழகும்படிச்செய்து அதனால்வருங் கூலியைக்கொண்டு வயிறாரவுண்டு சுகவாழ்வு பெறச்செய்தனர். ஆயினும் அயல் நாட்டிலிருந்து வரும் துணிகள் தடைபட்டு நின்றபாடுமில்லை. நாளடைவில் உள்நாட்டுத் துணிகளோ விற்பனையாகாமல் நின்றன. இதனால் தொழின்முறை

நடந்துவருவதும் தடையுற்றது. ஏழை மக்களது பிழைப்பிற்குங் குறைவு நேர்ந்தது. அயல்நாட்டுத் துணிகள் நயமாகவும் விலை சரசமாகவும் இருந்தமையால் உள்நாடெங்கும் பரவலாயின. யாது செய்வார் நம் பசவேசர்! மீண்டுங் கவலை பெரிதுடையராய்த் தாமும் தமரு தொண்டர்களுமாக யோசித்து இத்தொழின் முறையை மதப் பற்றுடன் பிணையல் செய்து நாட்டை நாடாச்க வேண்டுமெனத் தீர்மானித்தனர்.

எங்ஙனமென்னில், நாட்டிலுள்ளோர் அனைவரும் விதிப்படிச் சிவதீக்ஷை பெறுதல் வேண்டும்; சிவதீக்ஷை பெற்றவர்களே பருத்தியை எடுத்தல் வேண்டும்; சிவதீக்ஷை பெற்றவர்களே பருத்தியைப் பஞ்சாக்கல் வேண்டும்; அவர்களே பஞ்சை நூலாக நூற்றல் வேண்டும்; அத்தீக்ஷா சம்பன்னர்களே நூலை ஆடையாக நெய்தல் வேண்டும்; தீக்ஷைபெற்ற சதாசாரமுடைய யாரும் தீக்ஷைபெற்றவர்களால் நெய்யப்படும் ஆடையையே உடுத்தல் வேண்டும்; அந்த ஆசாரமுடையார் அதனைப் பெறுதார் நெய்யும் ஆடையையாவது, பிறநாட்டுத் துணிகளையாவது உடுக்காதிருத்தல் வேண்டும் எனச் சட்டநிரூபணஞ் செய்து கட்டளையிட்டனர். அதனால் பக்தர்களால் தேடப்படும் பணமனைத்தும் வெளியிடங்கட்குச் செல்லாமல் பக்தர்களிடத்திலேயே யிருந்துவர யாதொரு கஷ்டமுமின்றி யாவரும் தங்கள் குடும்பத்தைச் செவ்வனே நடத்திவந்தனர்.

அன்னியர் நெய்த துணியையாவது அயல்நாட்டு ஆடையையாவது சிவபக்தர்கள் தொடக்கூடாதெனக் கட்டளையிட்டிருந்ததனால் நம் பசவேசர்க்கு அன்னியமதத் துவேஷமாவது, அன்னிய நாட்டாரிடம் பெருமையாவது இருந்தனவென்று சுலபமாக எண்ணிவிடலாகாது, மற்றென்னையெனில், அவர் அப்படிச் செய்திராவிட்டால் உயிர்க்கொலை புரிதலைத் தடுத்திருக்க முடியுமா? பொய்ப் புலானுண்டலைப் போக்கியிருக்க முடியுமா? ஏழைமக்கள் கைத்தொழில்செய்து செல்வமுடையராய் நல்வாழ்வு பெறமுடியுமா? தம் நாட்டினின்றும் வறுமையாகிய பிணியை ஓட்டவும், தம் நாட்டை வளம்படுத்தலாகிய குணத்தைக் கூட்டவுங் கருதியே கடுப்பிணையுடைய மருந்தின்மேல் பூசப்படும் வெல்லக்கட்டியைப்போல் மதக்கோட்பாடாகிய சர்க்கரைக்

கட்டியால் மேற்கவசமிட்டுக் கைத்தொழில் அபிவிருத்தி என்னும் அருமருந்தைத் தம் நாட்டகத்தே புகுத்தலாயினர். இவற்றால் அவரது உட்கருத்தும் சுதேசாபிமானமும் இருந்தபடியை உணர்கின்றோமல்லவா?

பிறர் எக்குலத்திற் பிறந்தவராயினும் எம்முறையில் நடப்பவராயினும் சரி, அவர் பரமாத்மாவாகிய கடவுளிடத்து அன்புடையவராயின் நம் பசவேசர் அவர்பால் அன்புடைய அடியவராய் நடந்து கொள்பவர்.

சிவநாகமையர் என்னும் பெரியார் ஒருவர் அவதரித்திருந்தனர். அவர் இழிகுலமெனக் கருதப்படும் ஆதிதிராவிட குலத்திற் பிறந்தவர்; அன்பே வடிவமாயுள்ளவர்; சிவபக்தி அடியார் பக்திகளால் நிரம்பப்பெற்ற உள்ளமுடையராயிருந்தனர். மறந்தும் அவரது செய்கையில் உயிர்க்கொலை முதலிய பாதகங்கள் அணுகமாட்டா. புறத்தில் சிவார்ச்சனை செய்வதுடன் அகத்திலும் பூசைசெய்து அன்பே சிவமாயமர்ந்திருந்து சிவானந்தத்தை உண்பவர். இத்தகைய உண்மைப் பெரியாராகிய சிவநாகமையரை நம் பசவேசர் காணுவரேல் பள்ளத்திலோடும் வெள்ளம்போல் உள்ளமுருக வோடிப்பணிந்து உபசரித்து மகிழ்வர்: அவரைத் தம்மினும் மேலானவரென்று கருதி அவர்பால் நிரம்பிய சிவபக்திக்குப் பெரிதும் இன்புறும். இங்ஙனமிருப்ப, சில அதிகாரிகள் பசவேசர் சிவநாகமையருக்குச் செய்யும் வழிபாடுகளைக் கண்டனர். தங்குலத்திற்கும் நாட்டிற்கும் குறைவு நேர்ந்ததெனக் குழப்பமெய்தினர்; பொறாமை யென்னும் புலையனால் பிடர்பிடித்துந்தப்பட்டு விரைவிலோடி அரசன்பால் முறையிடலாயினர். மன்னர் மன்ன! இந்த நாடோ தருமத்திற்கு நிலையமாயுள்ளது. அதில் 'நீரோ அத்தருமமே உருவெடுத் தமர்ந்தாற்போல் விளங்கி ஆட்சிபுரிந்து வருகின்றீர். அத்தகையநாடு பறைச்சேரியாகுங் காலங்குறுகியதுபோ லிருக்கிறது. சனாதன வருணாச்சிரம தருமம் பாழடைதற்கான கலிகாலங் கால்கொண்டதுவோ என ஐயமும் அச்சமுந் தோன்றுகின்றன. சனாதன தருமங் குறையவே மழைபெய்யா தொழியுமே? அதனால் நாடு நிலைதடுமாறி வறுமையால் பெரிதுந் துன்புறுமே. இதற்கு யாம் யாது செய்தும்? எம்மிறையே! இதற்கான ஏற்பாடுகளைச் செய்து

எம்மைப் புரந்தராவிடின் யாம் இறந்துபடுவோம் என்று முறை யிட்டனர்.

அம்முறையீட்டைக் கேட்ட விச்சலமன்னன் திடுக்கிட்டெழுந்து வினைவலாளர்களே! ஏன் அப்படிக் குறை கூறுகின்றீர்கள்? நமது நாடு முதலமைச்சரால் யாதொரு குறையுமின்றி ஆட்சி புரியப்பட்டு வருகின்றதே. எல்லாத் தேவாலயங்களிலும், அன்ன சத்திரங்களி லும் பூசையும் தானமும் நடந்து வருகின்றனவல்லவா? அப்படி யிருக்க நீங்கள் முறையிடுவதற்கான குறைநேருவதற்குக் காரணம் யாது? நேர்ந்ததை நேர்ந்தவாறு கூறுக என்றனன். எனவே, அமைச்சராவோர் அரசற்கு உயிர்த் தோழராய் இருப்பவரல்லவா? அரசற்குரிய சௌக்கியமே தமக்குரிய சௌக்கியமென்று கருதவேண் டாமா? அரசற்கு வரும் மானமும் இழிவும் தமக்கு வந்தனவாக எண்ணவேண்டாமா? எக்காலத்தும் எவ்விடத்தும் இராஜதருமத் திற்குக் குறைவு நேராதபடி பார்த்துக்கொள்வதன்றோ அமைச்சரது கடமை! இஃது இங்ஙனமிருப்ப, மிகத்திறமை யுடையவரென்றும், அறிவிற் சிறந்தவரென்றும், இராஜபக்தியில் மேம்பட்டவரென்றும் பாராட்டப் பெற்றுவரும் உமது அமைச்சராகிய பசவர் கல்யாணபுரி யென்னும் மங்கலபுரியைப் பறைச்சேரியாகச் செய்து அமங்கலபுரி யாக்கத் தொடங்கிவிட்டனர் போலும்! இனி யாங்கள் யாது செய் தும்? எவரும் ஊரில்வசிப்பதற் கிடமில்லை. நாங்கள் வீதியிற் செல்வ தைக் கண்டால் 30 கஜம் கடந்து செல்லக்கூடிய பயபக்தியுடைய இழிந்த குலத்தினருக்கு எம்மால் வணங்கப்படும் முதலமைச்சராகிய பசவேசர் வந்தனமளித்து உடனழைத்துச் செல்வரேயானல் எங்கள் கதிதானென்னே? யாங்கள் எங்ஙனம் சகித்திருப்போம்? யாங்கள் எங்கள் குலதருமத்தையும், மததருமத்தையும் எவ்வாறு காப்பாற்றி வருவோம்? சனாதன தருமத்தையிழந்து உயிர் வாழ்வதினும் உயிர் துறத்தலே எங்கட்குரிய கடமையல்லவா? மிகத்தேர்ந்த அறிவுடை யாரெனக் கருதி எம்மால் தேர்ந்தெடுக்கப்பெற்று விளங்கும் முதல் அமைச்சரே குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக்காம்பாய் நாட்டிற்கே ஓர் பெருங்குறையைச் செய்தால் யாமென்ன செய்வோம்? வேலியே பயிரை யழித்தால் பயிர்தான் என்ன செய்யும்? என்று குறை கூறினர்.

அரசர் செவியே கண்ணாக வுடையவரல்லவா? குறைகூறக்கேட்ட அரசற்கோ கட்செவியினுங் கடுங்கோபம் உண்டாயது. சிறிதுநேரஞ் செய்வதின்னதென வறியாது கோபவயத்தனாய் வாளாவிருந்தனன்.

அக்கணமே பசவேசர் அச்சிவநாகமய்யருடன் இராஜசபைக்கு எழுந்தருளினர். அரசனோ அமைச்சரைக் கண்கள் சிவக்கக் கடுகி நோக்கினன்: நோக்கி மந்திரி வர்மரே! உம்முடன் தகாதவரை அழைத்துவந்து இச்சபைக்கு அகௌரவத்தை உண்டாக்குவது உமக்குத் தகுதியோ? என்று வினவினன். பசவேசர், மன்னர் பெரும! உமது கருத்தை யான் நன்றாக அறிவேன். இங்குள்ளார் உமக்கு அறிக்கை செய்துகொண்டதையும் நன்குணர்ந்தேன். ஆனால் தாம் உண்மையை ஆராயாது திடீரென்று என்மேல் கோபித்துக்கொள்வது தகுதியன்று; ஆதலினால் எனக்கு வருத்தமுமில்லை. ஆனால் உண்மை நிலையை எடுத்துக்காட்ட அடியேனுக்கு உத்தரவு கொடுத்தல் வேண்டும் என்று கேட்டுக்கொண்டு பின்வருமாறு கூறத்தொடங்கினர்.

உலகத்தையும் அதிலுள்ள சீவான்மாக்களையும் படைத்துக் காத்து அழிக்கும் அநாதி முதல்வராகிய கடவுள் ஒருவர் உண்டென்பதை ஆஸ்திகரனைவரும் ஒப்புக்கொள்வர். அப்பரமாத்மா எங்கும் வியாபகமாக நிறைந்து நின்று, யாவரும் மனோவாக்குக் காயங்களினால் செய்துவரும் ஒவ்வொரு செயல்களையும் பார்த்துக்கொண்டிருக்கின்றனர் என்பது உண்மையல்லவா? பிறப்பு இறப்புக்குக் காரணமா யிருக்கின்றது. பிறக்கும்பொழுது கொடுவந்த தொன்றுமில்லை; பிறந்து இறக்கும்பொழுது கொடுபோவதும் ஒன்றுமில்லை. ஆனால் அவரவர் செய்த நல்வினை தீவினை யென்னும் இருவினைகளும் உடன்சென்று அவற்றின் பயனைத்தராதொழியா. உடலைவிட்டு உயிர் போயினபின்னர் மகன் தந்தையென்றாவது, நாயகன் நாயகியென்றாவது புலையன் பார்ப்பானென்றாவது, அமைச்சன் அரசனென்றாவது வேறுபாடுண்டோ? வேறுபாடெல்லாம் உடலைப்பொருத்ததுதானே? உயிர்களெல்லாம் சென்றடையும் கதியாகிய இடம் அவைசெய்த இருவினைக்குத் தக்கவாறு இரண்டாகத்தானே இருக்கவேண்டும்? அவரவர் கொள்ளும் ஒழுக்கமல்லவா உயர்குடிக்குக் காரணம். இழுக்கம் இழிந்த பிறப்பாகவன்றோ கருதப்படும். அன்பும் அருளுமன்றோ

அரனடியைச்சேர்ப்பிப்பது. வன்பும் வழக்குமன்றோ வழுக்கிவீழ்த்துவது. கருணைக்கடலாகிய கடவுளுக்கு இவன் ஏழை, இவன் பணக்காரன் என்னும் பேதமுண்டா? உயர்குலத்தான் இழிந்தகுலத்தான் என்றும் பிறப்பு வேறுபாடுண்டா? அவர்க்குக் கூலிசெய்பவன்மாட்டுள்ள அன்பே குபேரன் மாட்டும் உண்டு. கள்ளிவயிற்றின் அகில் பிறப்பதுபோலவும், பல்விலைய முத்து உவர்க்கடலில் பிறப்பதுபோலவும் நல்லவர் பிறக்கும் குடியை யாவரே அறிவர்?

ஒருவன் உலகத்தில் செல்வவானாக இருந்து ஆடம்பரமான போலிச் செயல்களைச்செய்து அறிவிலிகளால் புகழப்பட்டதனாலேயே கடவுளாலும் புகழ்ந்தேற்றுக் கொள்ளப்படுபவன் ஆவனோ? சிலர் உயர்ந்த குடியிற் பிறந்திருக்கிறோமெனத் தருக்கித்து உண்மையில் நற்கருமத்தைச் செய்யாதும் உயிர்களிடத்து அன்பில்லாதும் ஆடம்பரமான போலிவேடத்தால் நடிக்கின்றனர்; அவரது உயர் குடிப்பிறப்பும் ஆடம்பரமும் ஆண்டவனுக்கு மகிழ்ச்சியைத்தருமா? குடியும் குலமும் நற்கதியைத்தரா; ஒழுக்கமும் அன்புமே நற்கதியைத்தரும்: கடவுளுக்கு மானிடர் யாவரும் புதல்வர்களாகையால் இவன் உயர் குடியிற் பிறந்தவன், இவன் தாழ்ந்த குடியிற் பிறந்தவன் என்னும் பேதபாவனையுண்டாகுமா? அவர் வேண்டுவது ஒழுக்கமும் அன்புமல்லவா? மக்களுள் ஒருவரை அவர்பாலுள்ள நற்குண நற்செயல்களை நோக்காது பிறப்பை மாத்திரம் கருதித்தாழ்த்த எண்ணுவது கடவுட்குப் பொருந்தாத மதியீனமல்லவா? கடவுளிடத்து அன்புகொண்ட ஒருவர் என்னைக் காப்பாற்றிவரும் பரமபிதாவாகிய ஆண்டவனைத் தரிசிக்கவேண்டுமென்றால், நீ மிகவும் ஏழை; ஆடை ஆபரணங்களில்லாதவன்; நீ வசிப்பதோ குடிசை; உண்பதோ கூழ்; உன்னைப்பெற்றவரோ இழிகுலத்தவர் என்று தடுப்பது தருமமாமோ? உயர்குடியிற் பிறந்து செல்வமுடையவனாயினும் ஒருவன் ஒழுக்கமில்லாதவனாயின் அவன் புலையனிலும் இழிந்த புலையனன்றோ? அவனைக்காணக் கடவுளும் கண் கூசாரோ? பரமாத்மாவாகிய இறைவற்கு எனது விலையுயர்ந்த ஆடை ஆபரணத்தின்மேல் இச்சையோ? அல்லது யான் ஏழையானால் என்னைக்காண அவருக்கு விருப்பமிராதோ? எனது சிறுகுடிலைக்கண்டு வெறுப்படைவரோ? யான் அவரது திருவடியைக் காணச் செல்வேனாயின் தமது பரிசுத்தநிலைமைக்குக் கேடுவருமென்று

அஞ்சி ஓடிப்போய்விடுவரோ? என்னிடத்தில் அன்பும் சீவகருணையும் இல்லையேல் பாபியைக் காணலாகாதென வெறுத்தொதுங்குவர். மக்களது ஒழுக்கமும் குணமும் உயர்விற்குக் காரணமெனக்கருதாது கேவலம் குடியினைமாத்திரம் உயர்வாகக்கருதி ஏழைமக்களை வெறுத்துத் தள்ளும் சுயநலப்பிரியரைக்காணின் பரமபிதாவாகிய கடவுள் கோபித்துத்தள்ளுவர் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஏழை மக்களைப் பாதுகாவாது பேதம்பாராட்டி ஒதுக்க நினைப்பவர் உள்ள தேயத்தில் தான் கடவுள் மழையைப் பெய்விக்காது தடுப்பர்; அங்ஙனமிருப்ப, கேவலம் பிறப்பினை மாத்திரம் கருதி அன்பும் அருளுமாகிய ஒழுக்கத்தைக் கருதாது கடவுள் வழிபாட்டிற்கும் தடைச்சட்டம் ஏற்படுத்தும் பேதபாவனையையுடைய புன்மதியினர் உள்ள நாட்டிலா மழையைப் பெய்விப்பர்? இது நம்பத்தக்கதன்று.

இவ்வாறிருக்க, பக்தசிரோமணியாகிய தூயமனமுடைய சிவநாகமய்யரை உபசரித்தலால் கடவுள் கோபிப்பார் எனக்கூறும் புன்மதியுடையார் கூற்றை நம்புவதென்னே! அன்புருவாகிய நாகமையரைத் துன்புறுத்தி வெறுப்பதனால் அடியார்க்கு அடியனாகிய கடவுளுக்கு மகிழ்ச்சியுண்டாகுமோ? தீக்ஷா சம்ஸ்காரத்தால் புறமும் அகமுந் தூய்மையை அடையாது, புறந்தூய்மை ஒன்றுமேலேயே உயர்ந்தவரெனக் காட்டிக்கொண்டு ஏழைமக்களது வருந்தித்தேடிய பொருளைக் கடவுட்கென்றும், கருமத்திற்கென்றும், ஏமாற்றிப் பிடுங்கிக்கொண்டு தம் மக்களுடன் விலாப்புடைக்கத் தின்றுழலும் மாயாவாதிகளுடைய பொய்ச்செயலுக்கா அக்கடவுள் மனமகிழ்வர்? அப்பாதகரை மகாபக்தரென்று நம்பலாமா? மடிவால மாச்சையர் என்பவர் எக்குலத்திலுதித்தவர்? கண்ணப்பர் என்னும் அன்புடையார் இவர்கள் கருதியபடி உயர்குடிப்பிறப்பினரா? உயர்வும் தாழ்வும் பிறப்பினுலா? ஒழுக்கத்தினுலா? இவற்றை நன்கு ஆராய்ச்சி செய்யவேண்டுமெனக் கூறி முடித்தனர்.

(தொடரும்)

# திருமுருகாற்றுப்படை.

(முன் தொடர்ச்சி).

ஆசிரியர் நக்கீரனர் "அகன்று பொருள்கிடப்பினும் அணுகிய நிலையினும், இயன்று பொருண்முடியத் தந்தனர் உணர்த்தல், மாட்டென மொழிப பாட்டியன் மருங்கின்" என்னும் ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியப் பொருளதிகாரப் புறத்திணையியல் ரு-வது சூத்திரத்தாற் கூறப்பட்ட மாட்டிலக்கணத்தால் நகள அடிகளான் இப்பாட்டினைச் செய்தாராகலின், உரையாசிரியராகிய உச்சிமேற் கொளத்தகும் நச்சினார்க் கினியரும் பற்பல அடிகளிலுள்ள மொழிகளைக் கொண்டுகூட்டிப் பொருள்கொண்டா ராயிற்று. அவ்வுரை அரிதினுணருந் தகைமைத்தாதலின் அவர் முடித்தவாறே இயைபுடைய தொடர்மொழிகளைத் தனித்தனியே எடுத்தெழுதி எம்போல்வார்க்கு எளிதில் விளங்குமாறு பதவுரை பொழிப்புரை விரிவுரையாகப் பாகுபடுத்தி இதன்கண் வெளியிடலாயினேம். இப்பாட்டின் நுண்பொருளை யுணர்ந்து முருகப் பெருமானது அருட் செயல்களைச் சிந்தித்துய்தற்கு இஃதோர் பயிற்சி முறையாமெனவும், இத்திங்கள் வெளியீடு இடையீடின்றி வெளிப்போந்து உலாவி வளர்தற்கு இப் பாட்டு இடையே விரவிவருதல் பெருந்துணையாமெனவும் கருதினேமாதலின் புலமைமிக்க பெரியார் இதன்கண் நிகழுங் குறைகளை எடுத்து விளக்கி யருள்புரிவாராக.

## க. திருப்பரங்குன்றம்.

"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
ஓவற இமைக்குஞ் சேண்விளங் கவிரொளி
உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள்
செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை
மறுவில் கற்பின் வாணுதல் கணவன்."

(பதவுரை). உலகம் உவப்ப — சீவான்மாக்கள் மகிழ, ஏர்பு — எழுந்து, வலன் திரிதரு — (மகாமேருவை) வலமாகத் திரிதலைச் செய்

யும், பலர்புகழ் ஞாயிறு – எல்லாச் சமயத்தாரும் புகழும் சூரியனை, கடல்கண் டாங்கு – கடலிடத்தே கண்டாற்போல, ஓ அற – (இரு வகை இந்திரியங்களும் தாம் செல்லுதற்குரிய பொருள்களின்மேல்) சென்று தங்குதல் இல்லையாக, இமைக்கும் அவிர் ஒளி – இமைத் துப் பார்த்தற்குக் காரணமாகும் விளங்குகின்ற ஒளியினையும், சேண் விளங்கு (ஒளி) – கட்புலனால் நோக்குவார் கண்ணிடங்க ளெல்லா வற்றினும் சென்று விளங்குகின்ற ஒளியினையும், உறுநர்த்தாங்கிய – தன்னைச் சேர்ந்தவர்களது (தீவினையைப் போக்கி அவரைத்) தாங்கு தற்பொருட்டு, மதன் உடை – அறியாமையை உடைத்தற்குக் காரண மாகிய, நோன் தாள் – வலிமையினையுடைய திருவடியினையும், செறு நர்த் தேய்த்த – அழித்தற்குரியாரை அழித்த, செல்உறழ் தடக்கை – இடியுடன் மாறுபட்ட பெருமை தங்கிய கையினையும் உடைய, மறு இல் கற்பின் – மறக்கற்பில்லாத அறக்கற்பினையும், வாள்நுதல் – ஒளி பொருந்திய நுதலினையுமுடையாராகிய இந்திரன்மகள் தெய்வயானையா ரது கணவன்.

(பொழிப்புரை). சீவான்மாக்கள் மகிழ எழுந்து மகாமேருவை வலமாகத் திரிதலைச்செய்யும் எல்லாச்சமயத்தாரும் புகழும் சூரியனைக் கடலிடத்தே கண்டாற் போல, இருவகை இந்திரியங்களும் தாம் செல்லுதற்குரிய பொருள்களின் மேற்சென்று தங்குதல் இல்லையாக இமைத்துப் பார்த்தற்குக் காரணமாகும் விளங்குகின்ற ஒளியினையும், கட்புலனால் நோக்குவார் கண்ணிடங்க ளெல்லாவற்றினுஞ் சென்று விளங்குகின்ற ஒளியினையும், தன்னைச் சேர்ந்தவர்களது வினையைப் போக்கி அவரைத் தாங்குதற்பொருட்டு அறியாமையை உடைத்தற் குக் காரணமாகிய வலிமையினையுடைய திருவடியினையும், அழித்தற் குரியாரை அழித்த இடியுடன் மாறுபட்ட பெருமைதங்கிய திருக் கையினையும் உடைய, மறக்கற்பில்லாத அறக்கற்பினையும் ஒளிபொருந் திய நுதலினையும் உடையாராகிய இந்திரன் மகள் தெய்வயானையா ரது கணவன்.

(விரிவுரை). ஒளியினையும் (௱), தாளினையும் (௪), கையினையும் (௫) உடைய கணவன் என முடிக்க.

'ஞாயிறு கடற்கண்டாங்கு' என்னும் இவ்வினையெச்ச வுவமம் "விரவியும் வருஉ மரபின வென்ப" என்னுந் தொல்காப்பியப் பொரு

ளதிகார வுவமவியல் உ-வது சூத்திரத்தால் தொழிலுவமமும் வண்ண வுவமமும்பற்றி வந்தது; என்னை? ஞாயிறு இருளைக் கெடுக்குமாறு போலத்தன்னை மனத்தால் நோக்குவார்க்கு 'மாயையைக் கெடுத்த லின் தொழிலுவமமும், தன்னைக் கட்புலனால் நோக்குவார்க்கு கடலின் பசுமையும் ஞாயிற்றின் செம்மையும் போல மயிலின் பசுமையும் திரு மேனியின் செம்மையுந்தோன்றலின் வண்ணவுவமமும் கொள்ளக் கிடந்தமையான் என்க. இதுபற்றியே 'ஓவற விமைக்குஞ் சேண் விளங்கவிரொளி' என்னுந் தொடரை 'ஓ அற இமைக்கும் அவிர் ஒளி' எனவும், 'சேண் விளங்கு ஒளி' எனவும் இரண்டாகப் பிரித்து, ஒளி என்பதனை இரண்டிடத்துங் கூட்டிப் பொருள்கொள் ளப்பட்டது.

தொழில் உமைம் கொள்ளுங்கால், உவப்ப எழுந்து திரியும் ஞாயிற்றைக் கடற்கண்டாங்கு அவிர்கின்ற ஒளியெனவும், வண்ண உவமம் கொள்ளுங்கால் உவப்ப எழுந்து திரியும் ஞாயிற்றைக் கடற் கண்டாங்குச் சேண்விளங்கு ஒளி எனவும் வினைமுடிபு செய்க.

ஓ என்பது ஓரெழுத்தொரு மொழியாகிய தொழிற்பெயர்; சென்று தங்குதல் என்பது பொருள். இமைத்தல்—கண்களின் "இதழ்களிரண்டினையும் குவித்தல்; அதுநுதலது இமைபாநாட்டம்" என்பதனால் உணர்க. உடைதாள்—வினைத்தொகை. தாங்கிய—செய் யிய என்னும் வாய்பாட்டு வினையெச்சம்.

'ஓவற விமைக்குஞ் சேண்விளங் கவிரொளி" என்பதனால் புறப் பற்றொழியக் கண்ணிமைகளைக்குவித்து உள்ளக்கமலத்தின் கண் ஓழி வற நிற்கும் உண்மைப்பொருளைக் காண்டற்குக் காரணமாகிய ஞான வொளியினையும், புறமுகத்தாற்கண்டு வழிபட்டுய்தற்குக் காரணமாகிய செய்மைக்கண் தோன்றும் மயிலின் பசுமையும் தனது மேனியின் செம்மையுமாகிய பேரொளியினையும் உடையான் என்பதும், 'உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாள்' என்பதனால் அணிமைக்கண் சென்று பணிந்தாரது தீவினையைப் போக்குதற்பொருட்டு அவரது அறியா மையைக் கெடுக்கவல்ல திருவடியினை யுடையான் என்பதும், 'செறு நர்த்தேய்த்த செல்லுறழ்தடக்கை' என்பதனால் தனது திருவடியை யடைந்த அன்பர்கட்கு இடையூற்றை விளைக்கும் பகைவரை அழிக்க வல்ல தோள்வலியுடையான் என்பதும், 'வாணுதல் கணவன் என்ப

என்பதனுல்' தான் சத்தியும் சிவமுமாய் நின்று உலகத்துக்கெல்லாம் போகத்தை யுண்டாக்கிக்காக்கும் படைப்பும் காப்பும் உடையான் என்பதும், கணவன் என்பதனுல் முருகன் என்பதும் பெற்ரும். இன்னும் இதனுசிரியர் குகையின்கண் அடைபட்டுழி அகமுகத்தால் தியானித்து மனத்தா னுணர்ந்த பெருமானது அருட்செயலைப் புறமாக நாட்டம்பெற்று வாயாரப் பாடியபொழுது மயிலின் மேலிவர்ந்து வந்து திருவடி தரிசனந்தந்து பூதப்பகையை யொழித்து அம்மையப்பராய்க் காட்சி தந்தருளிய கருணைத்திறம் இங்கு நினைவு கூரத்தக்கது. (தொடரும்).

---

# மருந்து.

உலகத்தின்கண் பெறுதற்கரியது மக்கட் பிறப்பு. தவத்தால் அப்பிறப்பினை யடைந்தார் தம்முடம்பினை நோயின்றிப் பேணுதல் செய்து, அதனுலாய இம்மை மறுமைப் பயன்களை அடைதற்குரியர். அங்ஙனம் உடம்பினைப் பேணுங்கால் மருத்துவ நூலார் (வயித்திய நூலார்) கூறியவாறு 'மருந்து' என்பதொன்று வேண்டற்பாலது. நோயினைத் தீர்த்தற்குக் கருவியாகிய மருந்தும் இயற்கையாலாய மருந்து, செயற்கையாலாய மருந்தென இருவகைப்படும். அவற்றை ஆராய்ந்து ஒன்றனைக் கடைப்பிடித்தல் நமது கடமையாதலின் ஈண்டு அஃது ஆராயப்படுகின்றது.

பழவினையானும் காரணங்களானும் மக்கட்கு வாதபித்த ஐயங்களாகிய பிணிகள் மூன்றுவரும். அவற்றுள் பழவினையால் வருவன அப்பழவினையின் கழிவின்கண் அல்லது தீரா; ஆதலின் அவற்றை விடுத்து, ஏனைக்காரணங்களால் வரும் பிணிகளைத் தீர்க்கும் மருந்தின் திறத்தை ஈண்டுக் கூறப்படுகின்றது. காரணங்களாவன :— உணவும் செயலுமாகிய இரண்டின் ஒவ்வாமை; ஆதலின் பிணிகளும் காரணங்களால் வருவனவாயின.

க. உணவும் செயல்களும் ஒருவனது வாதபித்த ஐயமென்னும் முப்பகுதிக்கும் ஒத்த அளவினவன்றி அதனின் மிகுமாயினும் குறையுமாயினும், ஆயுள்வேதமுடையாரால் வாதமுதலாக எண்ணப்

பட்ட மூன்று நோயும் அவனுக்குத் துன்பஞ் செய்யும். அம்முப்பகுதிக்கும் உணவு ஒத்தலாவது,—சுவை வீரியங்களாலும், அளவானும் பொருந்தியிருத்தல். செயல்கள் ஒத்தலாவது,—மனமொழி மெய்களாகிய மூன்றும் வருந்துவதற்கு முன்னரே அம்மூன்றனுற் செய்யுந் தொழில்களை ஒழிதல், உணவும் செயலுமாகிய இவையிரண்டும் இங்ஙனம் ஒத்துநில்லாமல் மிகுதல் குறைதல் செய்யின் வாத முதலிய மூன்று நோயும் தத்தம் நிலையினில்லாவாய் வருத்தும் என்பதாம். இதனுல் உடம்பிற்கு இயல்பாகிய நோய் வாதமுதல் மூவகைப் படும் எனவும், அவை துன்பஞ் செய்வதற்கான காரணம் உணவும் செயல்களுமாகிய இரண்டின் ஒவ்வாமையாகலின் இருவகைப்படும் எனவும் அறியத்தக்கது.

உ. ஒருவன் முன்னுண்ட உணவு அற்றபடியை (சீரணித்த விதத்தை)க் குறிகளால் தெளிய அறிந்து பின் உண்ணுவானுயின் அவனது உடம்பிற்கு மருந்தென்று செயற்கையாலாய வேறென்று வேண்டுவதில்லை. உணவு அற்றபடியை அறியுங் குறிகளாவன,—உடம்பு கனமின்றி யிருத்தல், தேக்கெறியுங்கால் (ஏப்பம் விடும்பொழுது) புளிப்பு முதலியனவின்றித் தூய்மையா யிருத்தல், மன முதலிய கரணங்கள் சோம்பலின்றித் தொழிற்குரியனவா யிருத்தல், பசி மிகுந்திருத்தல் முதலியன. இதனுல் முன்னுண்டது அற்றபடியை அறிந்து உண்ண வேண்டுமென்பதும், இதுவே இயற்கை மருந்தாதலின் செயற்கையாலாய மருந்தொன்று வேண்டுவதில்லையென்பதும் கூறப்பட்டன.

ரு. இம்மை மறுமை வீடுபேறுகளை அடைதற்குரியது இம்மானுட யாக்கையொன்றே. மிகப்பலவாய பிறவிகளினின்றுந் தப்பி இம்மானுட யாக்கையைப் பெற்றுன் அதனை நெடுங்காலங் கொண்டு செலுத்தி அதனுலாய பயன்களைத் தேடிக்கொள்ளுதல் வேண்டும். அங்ஙனம் உடம்பினை நீண்டகாலங் கொண்டு செலுத்துதற்கு முன்னுண்டது அற்றுப் போமாயின் பின்னுண்பதனை அறுமளவறிந்து அவ்வளவினவாக உண்ணுதல் தக்க நெறியாகும். ஆதலால் ஒருவன் முன்னுண்ட உணவு சீரணித்ததைக் குறிகளால் அறிந்துகொள்வதுடன் பின்னுண்ணும் உணவைக் குறித்த காலத்தில் சீரணிக்கும் அளவாக உண்ணுதல் வேண்டுமென்பது கூறப்பட்டது.

ச. முன்னுண்டது அற்றபடியை அறிந்து, பின்னரும் மிகப் பசித்து, உண்ணுங்கால் மாறுகொள்ளாத உணவுகளைக் குறித்துக் கொண்டு உண்ணுதல் வேண்டும். பின்னரும் மிகப்பசித்தலாவது,— முன்னுண்ட உணவின் உருவமழிந்து சத்தும் அசத்துமாகப் பிரிவு படுதல் பசித்தல் எனப்படும்; பசித்த பின்னரும் அசத்து ஒழிய சத்தாகிய அன்னரசம் மாறாது நிற்குமாகலின் அதுவும் இரத்தமாக மாற இரைப்பை வறிதாக நிற்றல் மிகப்பசித்தல் எனப்படும். மாறு கொள்ளாமையாவது, உண்பான் பகுதியோடும், காலவியல்போடும், சுவை வீரியங்களால் தம்முள்ளும் மாறு கொள்ளாமையாம். அவற் றுள் உண்பான் பகுதியோடு மாறுகொள்ளுதலாவது,— வாத,பித்த ஐயப்பகுதிக்கு அடாதவற்றைச் செய்வன. காலவியல்போடு மாறு கொள்ளுதலாவது, பெரும்பொழுது சிறுபொழுது என்னுங் கால வேறுபாடுகளுள் ஒன்றற்காவன பிறிதொன்றற் காகாமை. சுவை வீரியங்களால் தம்முள் மாறு கொள்ளலாவது,—தேனும் நெய்யும் சுவை வீரியங்களால் சிறந்த பொருள்களாயினும் தம்முள் அளவொத் துக் கலக்கப்படின் நஞ்சாதல் போல்வன. குறித்துக்கொண்டுண்ணு தலாவது,— மனம்பட்டவாற்றால் நாவின் சுவைக்கு அடிமைப்பட்டு ஒவ்வாதனவற்றை அளவின்றி உண்ணுதலால் நோயும், மரணமும் வருதலின் அவற்றைத் தடுக்க இன்ன பொருளை இன்ன அளவின வாகத்தான் உண்ண வேண்டுமெனத் திட்டஞ் செய்துகொண்டு எப் பொழுதும் நினைவோடு உண்ணுதல் எனப்படும். இதனால், முன் னுண்டது அற்றபடியை அறிவதுடன் மிகப் பசித்தலையும் அறிந்து மாறுகொள்ளாத வுணவைக் குறித்துக்கொண்டு உண்ணுதல் கூறப் பட்டது.

ரு. ஒருவன் மூவகை மாறுபாடுமில்லாத உணவைத் தன்னுள் ளம் வேண்டிய அளவினால் உண்ணாது, பிணிவாரா அளவினால் உண் ணுவானாயின் அவனுயிர்க்குத் துன்பம் விளைதல் உண்டாகாது. மாறு பாடில்லாத உணவாயினும் அளவிற் சிறிது குறைத்துண்ணுதல் ஒரு வற்கு நன்மையைத் தரும். இதுவரையும், உண்ணப்படுவன இவை. அவற்றது அளவும், காலமும், பயனும் இன்னவை எனக் கூறப் பட்டன.

சூ. அளவிற் சிறிது குறைத் துண்ணலே நன்றென் றுணர்ந்து அவ்வாறே உண்பவனிடத்தில் இன்பம் நீங்காது நிற்றல்போல, அளவு கடந்து மிகப்பெரிய இரையை விழுங்குபவனிடத்தில் நோய் நீங்காது நிற்கும். குறைத்துண்ணுதலால் வரும் இன்பமாவது யாதெனில்,— வாத முதலிய மூன்றும் தத்தநிலையில் திரியாமையின் மனமொழி மெய்கள் அவன் வயத்தவாதலும், அதனுல் அற முதலிய நான்கும் எய்தலுமாம். பேரிரையை விழுங்குபவனிடத்தில் நோய் நிற்றலாவது எங்ஙனமென்னில்,—கிடைத்தபொழுது பேரிரையை மெல்லாது விழுங்கி ஓரிடத்திற்கிடந்து அசைபோட்டு அறிவிழந்து உறங்கும் விலங்குபோலப் பேரிரையை யுண்டு மதிமயக்கங் கொள்ளலேயன்றி உடற்பிணியும் வருத்தக் கிடத்தலாம்.

எ. தன் பகுதியும், அதற்கேற்ற வுணவும், காலமும் ஆராயாது வேண்டியதோ ருணவை வேண்டியதோர் காலத்தே வயிற்றுத் தீயளவினதன்றி ஒருவன் மிக உண்ணுவானுயின் அவனிடத்து நோய்கள் அளவின்றி வளரும். இவற்றுல் குறைத்துண்ணு வழிப்படும் குற்றங் கூறப்பட்டது.

அ. மருத்துவ (வயித்திய) னுவான் ஆதுர (நோயாளியி) னிடத்தில் நிகழ்கின்ற நோயை அதன் குறிகளால் இன்னதென்று அறிந்து, பின்னர் அந்நோய் வருதற்கான காரணத்தை ஆராய்ந்து தெளிந்து, பின்னர் அதனைத் தீர்க்கும் உபாயத்தையறிந்து, அதனைச் செய்யுமிடத்துப் பிழையாமற் செய்தல் வேண்டும். உணவுஞ் செயலுமாகிய காரணத்தை ஆயுள்வேதமுடையார் நிதானம் என்பர். அக்காரணங்களை ஆராய்தலால் நோய் இன்னதெனவும், அதனைத் தணிக்கும்வழி இன்னதெனவும் ஐயமறத் துணிதல் உண்டாகும். அளவின்றியுண்ட காரணத்தால் வந்த அசிரண நோயாயின் பட்டினி போடுதலும், செயல்மிகுதி காரணத்தால் வந்த நோயாயின் ஓய்வு கொடுத்தலும் துணிந்து செய்தற்பாலன. மருந்து செய்தல், உதிரங் களைதல், அறுத்தல், சுடுதல் முதலியனவெல்லாம் நோய்தணிக்கும் வழியுள் அடங்கும்.

கூ. ஆயுள் வேதத்தினைக் கற்ற மருத்துவன் நோய்தணிக்கும் உபாயத்தினைச் செய்யுங்கால் நோயாளியின் பகுதி, பருவம், வேதனை,

வலிகளின் அளவினையும், சாத்தியம், அசாத்தியம், யாப்பியம் என்னும் சாதி வேறுபாடும், தொடக்கம் நடுவு ஈறு என்னும், வன்மை மென்மைகளுமாகிய பிணியின் அளவினையும், சிறுபொழுது பெரும்பொழுது எனப்படும் தன் செயலுக்கேற்ற காலத்தினையும் அம்மருத்துவநூல் நெறியால்நோக்கி அவற்றோடு பொருந்தச் செய்தல் வேண்டும். இவற்றால் மருத்துவன் பிணிதீர்க்குநெறி கூறப்பட்டது.

கo. பிணிக்கு மருந்தாவது ஒன்றன்று; நோயுற்றவன், அதனைத் தீர்க்கு மருத்துவன், அவனுக்குக் கருவியாகிய மருந்து, அம்மருந்தினைப் பிழையாமற் செய்பவன் என்று சொல்லப்பட்ட நான்கு வகையினையுடைய நான்கு திறத்ததுவே மருந்தெனப்படும். நோயுற்றவன் வகை நான்காவன.—பொருளுடைமை, மருத்துவன் வழிநிற்றல், நோய்நிலை புணர்த்தும் வன்மை, சிகிச்சைத் துன்பம் பொறுத்தல் என்பன. மருத்துவன் வகை நான்காவன,—நோய்கண்டஞ்சாமை, ஆசிரியனை வழிபட்டெய்திய கல்வியும் நுண்ணறிவுமுடைமை, பலகாலும் தீர்த்துவரும் அனுபவமுடைமை, மனமொழி மெய்கள் தூயவாதல் என்பன. மருந்தின் வகை நான்காவன,—பல பிணிக்கும் ஏற்றவாதல், சுவைவீரியம் விளைவு ஆற்றல்களால் மேம்படுதல், எளிதின் எய்தப்படுதல், பகுதியொடு பொருந்துதல் என்பன. மருந்தியற்றுவான் வகை நான்காவன,—நோயாளியிடத் தன்புடைமை, மனமொழி மெய்கள் தூயவாதல், மருத்துவன் சொல்லிய வண்ணஞ் செய்யும் வன்மை, அறிவுடைமை என்பன. இப்பதினாறுங் கூடிய வழியல்லது பிணி தீராமையின் இத்தொகுதியையும் மருந்தென்று கூறுவதாயிற்று. ஆயுள்வேதமுடையாரும் இவை கால்களாக நடக்குமென்பதுபற்றிப் பாதமென்றும், இவை மாறுபட்டவழி சாத்தியமும் முதிர்ந்து அசாத்தியமாமென்றும் கூறினர். இதனால் நோய் தீர்த்தற்கு வேண்டுவனவெல்லாந் தொகுத்துக் கூறப்பட்டன.

இதுவரையும் கூறியவாற்றான், நோய் பழவினையானும் காரணங்களானும் வருமென்றும், பழவினையால் வரும் பெருநோய் முதலியன அதன் கழிவிற்கணல்லது மருந்தால் தீராவென்றும், காரணங்களால் வருவனவே அதனால் தீர்க்கப்படும் என்றும், உணவும் செயலுமாகிய காரணங்களிரண்டும் மிகுதல் குறைதல் இல்லையாகும்படி அறிவால் தடுக்கப்படும்.

அறிவுடையார் இதுவரையுங் கூறியவாற்றால் நோய் பழவினையானும் காரணங்களானும் வருமென்பதும், பழவினையால் வரும் பெருநோய் முதலியன அதன் கழிவின்கண் ணல்லது மருந்தால் தீராவென்பதும், காரணங்களால் வருவனவே மருந்தால் தீர்க்கப்படும் என்பதும், உணவுஞ் செயலுமாகிய காரணங்களிரண்டும் மிகுதல் குறைதல் இல்லையாகும்படி அறிவால் தடுக்கப்படின் மருந்தென்று வேறொன்று வேண்டுவதில்லை யென்பதும், அவை மிகுதல் குறைதல் இல்லையாகும்படி அறிவால் உணர்ந்து தடுத்தலே இயற்கை மருந்தாமென்பதும், குறைத் துண்பான் இன்பத்தினை அடைதல் போலப் பேரிரையை விழுங்குபவன் நோயினைத் தவிராது அடைவான் என்பதும், பதினாறு வகையும் கூடிய வழியே மருந்தாவதல்லது பிறர் கருதியபடி ஒன்றே மருந்தாகா தென்பதும் ஆகிய இன்னோரன்னவற்றை ஆராய்ந்து கடைப்பிடித்துத் தம்முடம்பினைப் போற்றி நல்வழிப்படுத்தி நற்பேறு பெற்றுய்வாராக.

---

## ஸ்ரீமந் மகாதக்ஷிணகாசி நிஜசிம்மாசனதீஸ்வர சவுடய்யதானபுர சமஸ்தானம் ஜகத்குரு ஜகதாசாரிய விருபாக்ஷ உடையாரவர்கள்.

இந்த சமஸ்தானத்தின் காலம் திரிபுர சம்மார சமயமென்று சாசனங்களும் புராணேதிகாசங்களும் கூறுகின்றன. திரிபுவனமல்ல, விக்ரமாதித்திய, யாதவ, நாராயண, ஹிரியதேவரசு, மகதேவராயர், ராமச்சந்திர ராயர் முதலிய மன்னர் மன்னர்களால் சன்மானம்பெற்று இராஜகுருவென்னும் பிருதுடன் விளங்கிக்கொண் டிருந்ததன்றியும், வீரசைவ பிரமதரின் மூலத்தானமாகி, அமர கணங்களின் நிஜசிம்மாசன ஜகத்குரு பீடமென்றும் புகழப்பெறுகின்றது.

சுவாமி விருபாக்ஷ உடையார் 1892ல் அவதரித்தனர். 12-வது ஆண்டிலேயே கன்னடம், மராடிகற்று, உப்பள்ளி, பம்பாய் முதலிய இடங்களில் சமஸ்கிருதம் இங்கிலீஷ் பாஷைகளில் தேர்ந்து 18-வது

வயதில் தர்மவியாகரண சாகித்ய புராணுதி சாஸ்திரங்களில் பரோடா ராஜதானியில் ராஜசீய சமஸ்கிருத போர்டின் பரீக்ஷையில் மிகத் தேர்ச்சியடைந்து பரோடா மகாராஜா அவர்களால் தர்மபூஷணம் என்னும் பட்டமளிக்கப் பெற்று வருஷ காணிக்கையும் அளிக்கப் பெற்று விளங்குகின்றனர். பின்னர் கல்கத்தா சமஸ்கிருத காலேஜில் 3 வருஷம் ஷட்தர்சன வேதாந்த வேத பாஷ்யங்களைப் படித்து முடித்து 1912ல் தங்கமெடலுடன் வேததீர்த்தம் என்னும் பதவியையும் பெற்றனர். கர்நாடக தேசத்தில் வீரசைவர்களில் வேததீர்த்த பரீக்ஷையில் முதன் முதலில் தேறியவர் இவரே. ரத்லாம், சேலாணு, சீதாமகு, அமேததா, தேவாச, இந்தூர் முதலிய மத்திய இந்துஸ்தான அரசர்கள் இவர்க்கு பல சன்மானமளித்துப் பதவிகளையும் கொடுத்துள்ளார்கள். இந்தூர் மகாராஜர் இவரது வேதவித்யா அபார பாண்டித்தியத்திற்கு மெச்சித் தமது சமஸ்கிருத காலேஜில் வேதபாஷ்யத்திற்கு முதல் புரொபெஸராக இவரை வைத்துக்கொண்டார். பாளி பிரகரணத்தின் சார்பாக ஹைதராபாத்திற்குச் செல்ல வேண்டித் தமது வேலையை ராஜீநாமா செய்துவிட்டனர்.

பம்பாய், லாகூர், அலகபாத் முதலிய பட்டணங்களில் பல உபந்யாசங்களைப் புரிந்து அங்குள்ள கல்விமான்களால் வித்தியாநிதி, வித்தியாரத்தினம் முதலிய பட்டங்களைப்பெற்று, கர்நாடகம், மகாராஷ்டரம், மத்தியமாகாணம், நைஜாம், வடஇந்துஸ்தானம் முதலிய இடங்களில் சஞ்சரித்து உபதேச மொழியால் அங்குள்ளாரை நல்வழிப்படுத்தியதல்லாமல் அங்குள்ள சபைகளுக்கெல்லாம் அத்தியக்ஷராகவும் விளங்குகின்ருர். இந்த சுவாமிகள் மைசூர் பக்கத்தில் சஞ்சரித்தபோது ஸ்ரீமன் மகாராஜரவர்களால் ஆதரிக்கப்பெற்றுத் தமது மடத்திற்கும் அரண்மனைக்கும் இருந்துவந்த பழய மரியாதைகளையும் கொடுக்கப் பெற்று அந்நாடெங்கும் சஞ்சாரஞ் செய்யும்படியும் பெருமை பெற்ருர்கள். ஸ்ரீ உடையாரவர்கள் கன்னடம் முதலிய 8 பாஷைகளில் உபந்யசிக்கும் அபார சக்தியும் கிரந்த வியாக்யானஞ் செய்யுந் திறமையும் வாய்ந்தவர்கள். வீரசைவ சமாஜத்திற்கு இவர்களால் இதுவரை செய்துள்ள உபகாரங்கள் பல. பாளி பிரகரணத்திலும், பனவாசி விவகாரத்திலும் சமாஜத்திற்காகச் செய்துள்ள சுவாமிகளுடைய பேருபகாரத்திற்காக வீரசைவ உலகம் என்றும் நன்றி

பாராட்டற் குரிமையையுடையது. உடையவர் என்றால் மேலானவர் என்பது பொருள்.

இத்தகைய மகாசுவாமிகள் இப்பொழுது வீரசைவ உலகத்திற்குச் செய்துவரும் பேருபகாரம் பாராட்டத் தக்கது. சாஸ்திர சம்பந்தமானது. காலத்திற்கேற்றது. இவரது குணவிசேடங்களனைத்தும் வீரசைவ கரதர்ப்பணாவில் காணப்படுகின்றன. இந்த சுவாமிகள் செய்துவரும் சீர்திருத்தங்கள் பின்னர் காட்டப்பெறும்.

(தொடரும்).

இங்ஙனம்,

வைத்தியம், வை. சே. குருசாமி ஐயர், குகை சேலம்.

# வீரசைவ சித்தாந்த பஞ்சாங்கம்.

**பிரமோதூத௵ வைகாசி௴, சாலியவாகனசக௵ 1853, கலி௵ 5032.**

| | ஆங்கிலம் | தமிழ் | வாரம் | திதி | | நக்ஷத்திரம் | | யோகம் | கரணம் | அமிர்தாதி யோகங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 14 | ௧ | புதன் | துதி | 44-50 | அனு | 7-29 | சிவ | தை | அ.—சி. |
| | 15 | ௨ | வியா | திரி | 47-21 | கேட் | 11- 4 | சித் | வ | சித்தம் |
| | 16 | ௩ | வெள்ளி | சது | 51- 0 | மூல | 15-41 | சாத் | பவ | அ.—சி |
| | 17 | ௪ | சனி | பஞ் | 55-22 | பூரா | 21-15 | சுப | கவு | சித்தம் |
| | 18 | ௫ | ஞாயிறு | சஷ் | 60- 0 | உத் | 27-24 | சுப் | கர | அமிர்தம் |
| | 19 | ௬ | திங்கள் | சஷ் | 0-19 | திரு | 3-51 | பிரா | வி | அ.—சி. |
| | 20 | ௭ | செவ் | சப் | 5-19 | அவி | 40-10 | மா | பா | மரணம் |
| 1930 மே | 21 | ௮ | புதன் | அஷ் | 9-59 | சத | 45-57 | வை | தை | சி—அ. |
| | 22 | ௯ | வியா | நவ | 13-59 | பூர | 50-59 | விஷ் | வ | சித்தம் |
| | 23 | ௧௦ | வெள்ளி | தச | 16-59 | உத் | 44-59 | பிரீ | பவ | சி—அ. |
| | 24 | ௧௧ | சனி | ஏகா | 18-38 | ரேவ | 57-44 | ஆயு | கவு | மரணம் |
| | 25 | ௧௨ | ஞாயிறு | துவா | 19-12 | அஸ் | 59-15 | சௌ | கர | மரணம் |
| | 26 | ௧௩ | திங்கள் | திர | 18-30 | பரணீ | 59-30 | சோ | வி | சித்தம் |
| | 27 | ௧௪ | செவ் | சது | 16-35 | கார் | 58-38 | அதி | சது | சி.—அ. |
| | 28 | ௧௫ | புதன் | அமா | 13-35 | ரோ | 56-47 | சுக | கிம் | சித்தம் |
| | 29 | ௧௬ | வியா | பிர | 9-38 | மிரு | 54- 3 | திரு | பா | மரணம் |
| | 30 | ௧௭ | வெள்ளி | துதி | 4-50 | திரு | 50-44 | சூல | தை | சித்தம் |
| | 31 | ௧௮ | சனி | சது | 53-37 | புனர் | 46-58 | கண் | வ | சித்தம் |
| | 1 | ௧௯ | ஞாயிறு | பஞ் | 47-36 | பூச | 42-58 | விரு | பவ | சித்தம் |
| | 2 | ௨௦ | திங்கள் | சஷ் | 41-33 | ஆயி | 38-55 | துரு, விய | கவு | சித்தம் |
| | 3 | ௨௧ | செவ் | சப் | 35-39 | மக | 35- 0 | அரி | கர | சித்தம் |
| | 4 | ௨௨ | புதன் | அஷ் | 30- 4 | பூர | 31-24 | வச் | வி | அமிர்தம் |
| | 5 | ௨௩ | வியா | நவ | 24-59 | உத்ர | 28-19 | சித் | தை | மரணம் |
| | 6 | ௨௪ | வெள்ளி | தச | 20-35 | அத் | 25-57 | விய | வ | அமிர்தம் |
| 1930 ஜூன் | 7 | ௨௫ | சனி | ஏகா | 17- 5 | சித் | 24-29 | வரி | பவ | மரணம் |
| | 8 | ௨௬ | ஞாயிறு | துவா | 14-36 | சுவா | 24- 3 | பரி | கவு | சித்தம் |
| | 9 | ௨௭ | திங்கள் | திர | 13-16 | விசா | 24-57 | சிவ | கர | மரணம் |
| | 10 | ௨௮ | செவ் | சது | 13-13 | அனு | 26-46 | சித் | வி | சித்தம் |
| | 11 | ௨௯ | புதன் | பௌ | 14-26 | கேட் | 30- 0 | சாத் | பா | சித்தம் |
| | 12 | ௩௦ | வியா | பிர | 16-53 | மூல | 34-23 | சுப | தை | சித்தம் |
| | 13 | ௩௧ | வெள்ளி | துதி | 20-23 | பூரா | 39-41 | சுப் | வ | சித்தம் |
| | 14 | ௩௨ | சனி | திர | 24-54 | உத் | 45-42 | பிரா | பவ | மரணம் |

வைகாசி௴

4 திருதினஸ்பிருக்கு
7 கரிநாள்
8 அலப்பியம், ரிதுனையனம்
12 பிரதோஷம்
14 அமா., கார்.
15 அக்னிநாள் முடிவு.
16 கரிநாள்
18 ஸ்ரீஜகத்குரு ஏகோராமாராத்திரியர் ஜயந்தி
19 ஸ்ரீஜகத்குரு தாருகாசாரியர் ஜயந்தி
20 சஷ்டிவிரதம்
22 அலப்பியம்
24 பாபஹரா தசமி
26 பிரதோஷம்
27 வைகாசி விசாகம், பொம்மபுரம் ஸ்ரீசிவஞானபாலைய சுவாமிகளின் மகா குருபூஜை
28 பூரணை விரதம்

# நன்கொடை.

1. பவித்திரம் அல்லமாப் பிரபுதேவர் மடாலயம் குருசாமியார் ஸ்ரீமத் அப்பாவையர் அவர்கள் நமது பத்திரிகையின் வளர்ச்சியைக் கருதி மனமுவந்தளித்தது ரூ 3-0-0, இந்த நன்கொடை பாராட்டத் தக்கதே.

2 கும்பகோணத்திலிருக்கும் மளிகை வியாபாரம் திருவாளர் வீரசைவ பொ. அப்பாசாமி செட்டியார் அவர்கள் தமது மருமான் மதுரை சிரஞ்சீவி முத்துமல்லிகார்ச்சுனருக்குத் தமது புதல்வி சௌபாக்கியவதி மங்களம்மாளைப் பாணிக்கிரகண முகூர்த்தஞ்செய்து கொடுத்த வைபவத்தில், நமது மகாசங்கத்திற்கு நன்கொடையாக ரூ. 2-0-0 மணியார்டர் செய்துள்ளார்கள். மணமகனும் மணமகளும் தீர்க்காயுளுடன் சகல சம்பத்தும்பெற்று வாழ்வார்களாக.

3. சேலம்சில்லா எளம்பிள்ளை கிராமத்திலிருக்கும் நமது பத்திரிகையின் அபிமான சீலராகிய திருவாளர் A. சித்தையன் என்பவர் பத்திரிகையின் வளர்ச்சியைக் கருதித் தமது சந்தாவுடன் இதர நண்பர் மூவரின் விலாசத்தையும் அவர்கட்காகத் தமது சொந்தத்திலிருந்து இனுமாக ரூ. 6-0-0ம் மணியார்டர் செய்வித்து பத்திரிகை அனுப்புமாறு தெரிவித்துள்ளார்கள். அவர்கள் முயற்சிக்கும் அன்பிற்கும் இறைவன் இன்னருள் புரிவாராக.

4. மேட்டுப்பாளயத்திலிருக்கும் தருமபுரி திருவாளர் கந்தசாமி ஐயர் அவர்கள் தமது புதல்வி சௌ. தருமாம்பாள் ருதுஸ்நான மங்களத்தில் ரூ. 1—0—0, ஷெயூர் பழநியப்பாவையர் கனராதனையில் ரூ. 0-8-0, வளையடுப்பு திரு. வீரையர் அவர்கள் மனைவியார் கனராதனையில் ரூ. 0-8-0, ஆக ரூ. 2-0-0ம் மே. வட்டகைக் காரியதரிசி திருவாளர் S. முத்துசாமி ஐயர் அவர்கள் மூலமாக மகாசங்கத்திற்கு சேர்ப்பிக்கலாயின.

5. செட்டிகுளம் மலையடிவாரம் வீரசைவ மண்டபத்தின் திருப்பணிக்கு முன்பக்கத்துக் கல் நிலைக்காக முசிரியிலிருக்கும் வரலூர் திரு. குமாரவீரையர் அவர்கள் ரூ. 20-0-0, பெருவளநல்லூரிலிருக்கும் திரு. லா. ச. வைத்திலிங்கய்யர் அவர்கள் ரூ. 5-0-0, கொடுத்துதவியுள்ளார்கள். முன்பக்கத்திய சுவர்க்காகுந் தொகையை வளையடுப்பு திரு. பொன்னுசாமி ஐயரவர்கள் கொடுப்பதாக வாக்களித்துள்ளார்கள். ஏனையவரும் தம்மாலியன்ற உதவி செய்வார்களாக.

# வீரசைவத்தின் சந்தா முதலிய விபரம்.

1. நமது பத்திரிகைக்கு ஓராண்டிற்குக் குறைந்த சந்தா இல்லை யாதலின், எந்த மாதத்தில் சேர்ந்தாலும் அந்த வருடம் ஜனவரி முதலிதழ்முதல் சேர்த்தனுப்பி வருடத்தொடக்கத்திலிருந்தே கணக்கு வைத்துக்கொள்ளப்பெறும்.

2. எப்பொழுதும் சந்தாத்தொகையை முன்பணமாகச் செலுத்தல்வேண்டும். V. P. மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் மணியார்டர் செய்வதில் சந்தாத் தொகைக்குமேல் இரண்டணாத்தான் செலவாகும் வி. பி. மூலம் வரவழைப்பதனால் ஐந்தணா செலவாகும். ஆதலின் மணியார்டர் மூலமாக முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்வதே நலம்.

3. சந்தாதாரராகச் சேர விரும்புவோர் தமது விலாசத்தைத் தெளிவாக எழுதி யனுப்புதல் வேண்டும்.

4. யாருக்கேனும் பத்திரிகையின் இதழ் கிடைக்காவிட்டால் அம்மாத முடிவிற்குள் தங்கள் சந்தா நம்பருடன் தெரிவித்துப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். இன்றேல் வேண்டும் இதழுக்கு விலை கொடுத்துப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

5. இடம்மாறும் சந்தாநேயர்கள் தங்கள் புதுவிலாசத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன் விவரத்தை வேண்டும் தபாலாபீசார் இடமும் தெரிவித்துக்கொள்ள வேண்டும்.

6. சந்தா நம்பரைக் குறிப்பிடாத கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா. பதில் விரும்புவோர் ரிப்ளை கார்டாவது தபால் தலையாவது அனுப்புதல் வேண்டும்.

7— மாதிரி இதழ் வேண்டுவோர் மூன்றரை அணாத் தபால்தலை அனுப்பிப் பெற்றுக்கொள்க.

| | | |
|---|---|---|
| ஆயுட் சந்தா | ... ... ... | ரூ. 25–0–0 |
| ஆண்டுச் சந்தா | ... ... ... | ,, 2–0–0 |
| மாணவர்கட்கு ஆண்டுச் சந்தா | ... | ,, 1–8–0 |
| தனிப்பிரதி | ... ... ... | ,, 0–3–0 |

## விளம்பர விகிதம்,

| | | | |
|---|---|---|---|
| பக்கம் 1-க்கு | மாதம் 1-க்கு | ... ... | ரூ. 5—0—0 |
| ,, ½-க்கு | ,, | ... ... | ,, 3—0—0 |

நீண்டகால விளம்பரத்திற்கு "வீரசைவ நிலைய"த்திற்கு எழுதித் தெரிந்துகொள்க.